# சங்க கால களவொழுக்கத்தின் வரலாற்றுப் பதிவுகள்

# A few records of the History of Sangam period's Love

**முனைவர் த. சத்தியசீலன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நவ இந்தியா, கோயம்புத்தூர் – 641 006.

**Dr T. Sathiyaseelan,** Assistant Professor, Department Of Tamil, Sri Ramakrishna College of Arts and Science (Autonomous), Nava India, Coimbatore – 641 006.

**DOI : 10.5281/zenodo.7879854**

## Abstract

During the Sangam era, the love between the leader and the leader was seen as a combination of love, shame, fear and morality. All the places in Sangam literature where the love between the leader and the leader is told are very beautiful. Love blossoms between two unrelated hearts, love. Love is the overflow of love from one heart through the eyes into another heart. Sangathalaivan is a person who says that they can't separate their love just like rain falling on red soil, soil and water can't be separated. One Sangathalaivi, considering the tree that grew with her as her sister, was shy and hid herself when she met the leader. Sangha literary songs are emphatically recorded here and there in the meaning of love. How much hesitation and confusion prevailed between the two to fall in love can be seen in many places in Sangha literary songs.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே எழுந்த காதல் காதல், வெட்கம், அச்சம், ஒழுக்கம் போன்றவற்றின் கலவையாகக் காணப்பட்டது. சங்க இலக்கியத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையேயான காதல் சொல்லப்படும் இடங்களெல்லாம் மிக அழகு. எவ்வித உறவும் இல்லாத இரு இதயங்களுக்குள் மலரும் அன்பே, காதல். ஒரு இதயத்தில் இருந்து கண்களின் வழியே மற்றொரு இதயத்திற்குள் போதும் போதும் என்றளவிற்கு அன்பை நிரம்பச் செய்தது காதல். எவ்வித உறவுமின்றி அறிமுகமாகி, காதலாகி செம்மண்ணில் மழைப் பெய்து, மண்ணும், நீரையும் பிரித்தெடுக்கவியலாததைப் போல தங்களது காதலைப் பிரிக்க முடியாது என்கிறான், சங்கத்தலைவன் ஒருவன். தன்னுடனே வளர்ந்த புன்னை மரத்தைச் சகோதரியாகக் கருத, அதனுருகே தலைவனைச் சந்திக்குமிடத்து, வெட்கி ஓடி ஒளிந்தாளாம், சங்கத்தலைவி ஒருத்தி. காதல் என்ற பொருளிலே ஒலித்ததை, ஆங்காங்கே அழுத்தமாகப் பதிவிட்டுச் செல்கின்றன சங்க இலக்கியப் பாடல்கள். காதலில் விழுவதற்கு இருவருக்குள்ளும் எவ்வளவு தயக்கமும், குழப்பமும் நிலவியதை பல இடங்களில் சங்க இலக்கியப் பாடல்களின் வழி பல இடங்களில் காண முடிகிறது.

**Keywords:** சங்க காலம், சம காலம், தலைவன் தலைவி, குறுந்தொகை, செம்புலப் பெயல் நீரார், புன்னை மரம்.

**முன்னுரை**

எவ்வித உறவும் இல்லாத இரு இதயங்களுக்குள் மலரும் அன்பே, காதல். ஒரு இதயத்தில் இருந்து கண்களின் வழியே மற்றொரு இதயத்திற்குள் போதும் போதும் என்றளவிற்கு அன்பை நிரம்பச் செய்வதே இந்த காதல். இந்நிகழ்வை எவ்வளவு அழகாக எடுத்தியம்புகிறது குறுந்தொகை (பாடல் எண். 40). இப்பாடலை அவ்வளவு எளிதாக யாரும் மறந்திருக்கவியலாது. இன்றும் செல்லிடைப்பேசிகள் பலவற்றின் அழைப்பிசையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது இப்பாடல்.

**“யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”**

என்று குறிப்பிடுகிறார், செம்புலப் பெயர் நீரார்.

உன்னுடைய தாயும் என்னுடைய தாயும் முன்பின் அறிமுகமில்லாதவர்கள். என்னுடைய தந்தையும், உன்னுடைய தந்தையும் எவ்வித உறவுமற்றவர்கள். நானும் நீயும் எவ்வித உறவுமின்றி அறிமுகமானோம். ஆனால், செம்மண்ணில் மழைப் பெய்தால், எப்படி மண்ணையும், நீரையும் எப்படி பிரித்தெடுக்கவியலாதோ, இதை யாராலும் பிரிக்க வியலாது, நம்முடைய காதல் நெஞ்சங்கள் கலந்து விட்டன, என்கிறான் தலைவியிடம் தலைவன்.

**புன்னை மரத்தடியில்**

ஒரு காட்சியில் தலைவனும், தலைவியும் ஒரு தோப்பிற்குள் தன்னந்தனியாகச் சந்திக்கின்றனர். மலைமுகட்டில் சூரியன் மறைகின்ற மாலை நேரத்தில், இதமான வெப்பமும், சிலுசிலுவென்ற தென்றல் காற்றும் இருவர் மனதில் சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது. அத்தோப்பிற்குள் புன்னை மரம் ஒன்று பூத்து குலுங்கிக் காணப்படுகிறது. அதன் அடர்ந்த நிழலில் அமர்ந்து இன்பக் கதைகள் பேச ஆசைப்படுகிறான் தலைவன். முகம் முழுவதும் சிவந்து வெட்கத்துடன் மறுக்கிறாள், தலைவி.

காரணம் என்னவென்று தலைவன் கேட்க, ‘என் அம்மா குழந்தைப் பருவத்தில் இந்த தோப்பிற்கு வந்துதான் விளையாடுவாளாம். அப்பொழுது கேட்பாரற்று கிடந்த புன்னை மரம் விதை ஒன்றை எடுத்து மணலில் ஊன்றி வைத்தாளாம். அவள் பருவத்தை தொட்ட போது, அன்று ஊன்றிய விதை துளிர்த்து நின்றதாம். அதன் நிழலில் தான் தோழிகளோடு விளையாடுவாளாம்.

அன்னை வளர்த்த மரம் என்பதால் இவளுக்கு இது அக்காவாய் ஆனதாம். இது உன் தமக்கை என்று அம்மா தான் அறிமுகம் செய்து வைத்தாளாம். அதன் காரணமாக அக்கா முன், நீ தொட்டால் பற்றிக் கொள்ளும் வெட்கம், என்றாள் தலைவி என்பதை பின்வருமாறு விளக்குகிறது, நற்றிணை பாடல்.

**“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முலை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்த்தது**
**நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் தும்மொடு நகையே!”**

அக்காளாய் நினைத்து வளர்த்த புன்னை மரத்துக்கு அருகில் தலைவனுடன் அமர்ந்து கொள்ள வெட்கம் கொள்கிறாள், இந்த சங்கத்தலைவி. இந்நிகழ்வை சற்று நம் மனக்கண்ணுக்கு முன்பு கொண்டு வந்து நிறுத்தினால் சங்ககாலப் பெண்கள் களவொழுக்கத்தை எப்படி போற்றி வந்தனர் என்பதை அறியமுடிகிறது.

அடர்ந்த நந்தவனத்தில் சந்திப்பு. தலைவனை எதிர்க்கொள்ளத் துணிவின்றி நாணி, முகம் சிவந்து, வெட்கம் உடலெங்கும் பரவ லேசான நடுக்கத்துடன் காணப்படுகிறாள், தலைவி. சற்றேறக்குறைய தலைவனுக்கும் இதே நிலை தான். தலைவியின் அருகில் செல்வதற்கே அவ்வளவு தடுமாற்றம். நடக்க முயல, கால்கள் ஒன்றுக்கொன்று பின்னியதைப் போன்ற உணர்வு. பல சந்திப்புகள் இத்தகையதே. ஒழுக்கத்துடன் களவையும், களவுடன் கூடிய ஒழுக்கத்தையே மரபாகக் கடைபிடித்தனர் சங்க கால தலைவனும், தலைவியும்.

தலைவனும் தலைவியும் ஊழ்வினைப் பயனால் சந்தித்து, கண்களால் சந்தித்து, விருப்பத்தைப் பரிமாறிக்கொள்வது ‘இயற்கைப் புணர்ச்சி’. பின்னர் இருவரும் பழக ஆரம்பித்து, இதயங்கள் ஒன்றுபடுவது ‘உள்ளப் புணர்ச்சி’. தலைவன் தலைவியின் கூந்தலை வருடுதல், கைகளைப் பற்றுதல் போன்றவற்றால் தன் காதலை வெளிப்படுத்துவது, ‘மெய்யுறுப் புணர்ச்சி’.

**களவு-காதல்**

சங்க இலக்கியங்களில் ‘களவு’ என்ற சொல் காதலைக் குறிக்கிறது. சங்க காலத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் திருமணமாகாத ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் மீது கொண்டிருந்த காதல், களவொழுக்கம் என்று கூறப்படுகிறது. தலைவன், தலைவியின் களவில் ஒழுக்கம் போற்றப்படுகிறது. இக்களவொழுக்கம், கற்பொழுக்கத்தில் முடிய வேண்டும் என்பது தமிழரின் வாழ்க்கை முறையாக இருந்தது. தலைவனும், தலைவியும் காதல் கொண்டு, பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டு வாழ்வது கற்பொழுக்க மரபு.

தமிழ் இலக்கியங்களில் 'திணை' என்பது ஒழுக்கமாகும். மனம் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் ஒன்று கூடி தாம் அனுபவித்த இன்பம் எத்தகையது? என்பதைப் பிறரிடம் சொல்ல முடியாமல் மனத்தினுள், அதாவது அகத்தினுள் அனுபவிக்கும் உணர்ச்சியே அகத்திணை. சில அகத்திணை உவமைகள் சங்ககால மக்களின் காதல் வாழ்க்கையை நமக்கு கண்முன் காட்டுவதாக அமைகின்றன.

ஐந்திணை ஐம்பதின் ஒரு உவமை, மெய்யான காதல் வாழ்வு வாழும் கணவனும்,மனைவியும் எவ்வாறு விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்று நமக்கு உணர்த்துகிறது, ஐந்திணை ஐம்பது பாடல்.

**“சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்**
**பிணைமா னினிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்**
**கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல**
**ருள்ளம் படர்ந்த நெறி"**

என்கிறார், மாறன் பொறையனார். இதில்,

காதல் மிகுந்த ஆண் மானும், பெண் மானும் பாலை நிலத்தில் விளையாடிக் களைத்து தாகம் தீர்க்க நீர் தேடி அலைகின்றன. அப்போது சுனையைக் காண்கின்றன. அதில் சிறிதளவு மட்டுமே நீர் உள்ளது. இரு மான்களும் அச்சுனை நீரை பருகத் தயாராகின.

பெண் மான் பருகட்டும் என்று ஆண் மான், நீரைப் பருகுவது போல் பாவனை செய்தது. இதே போல் ஆண் மான் அருந்தட்டும் என்று பெண் மானும் நீர் அருந்துவது போல் பாவனை செய்தது. சுனையின் நீர் தீரவே இல்லை. இது இருமான்களும் ஒன்றன் மீது, மற்றொன்று கொண்டிருந்த காதலை நமக்கு உணர்த்துகின்றன.

காதல் வாழ்விலும் சரி, இல்லற வாழ்விலும் சரி கணவனும், மனைவியும் எவ்வாறு தாமாக விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதற்கு இவ்வஃறிணை உயிர்கள் வழியாக உணர்த்துகிறது, இவ்வைந்திணை ஐம்பது பாடல்.

சங்க கால தலைவன், தலைவி முதல் சமகால காதலன், காதலிகள் வரை, கொள்ளும் களவொழுக்கத்தில் ஒருவருக்கொருவர் கொள்ளும் காதலானது, திருமணத்திற்குப் பிறகு இறப்பு வரையிலான கற்பொழுக்கத்திலும் நீடித்ததா? அல்லது நீடிக்கிறதா? என்பது மில்லியன் டாலர் கேள்வி. களவொழுக்கத்தில் இருவருக்கிடையே காணப்பட்ட அதே காதல் கற்பொழுக்கத்திலும் காணப்பட்டதா? என்ற வினா நமக்குள் எழத்தான் செய்கிறது. காரணம் சமகால காதலில் காதலர்களின் பிரிவுகளும், காதல் தம்பதிகளின் மணவாழ்க்கையின் முறிவுகளுமே. புரிதலற்றுப் போதல், இருவருக்குமிடையேயான இடைவெளி அதிகரித்தல், அன்பு தோய்ந்து போகுதல், ஒரே வீட்டில் எதிரிகளாக வாழுதல் போன்றவையெல்லாம் காதலைக் கேள்விக்குள்ளாகிறது. கேலிக்கூத்தாகவும் மாற்றுகிறது.

தலைவனின் கண்களின் வழியாக நுழைந்து, இதயத்திற்குள் வண்ணக் கோலமிட்ட தலைவியின் சுட்டும் விழிச்சுடர்களில் பற்றி எரிந்த காதல் தீ, ஏனோ தீபமாகச் சுருங்கிச் சிறிய சுடராக மாறிவிடுகிறது. விருப்பங்களும், எதிர்பார்ப்புகளும் நிறைவேறாமல் போகும்பட்சத்தில் ஏற்படுத்தும் உளவியல் தாக்கங்களை இதற்குக் காரணமாகச் சுட்டலாம். களவொழுக்கத்தின் போது காணப்பட்ட புரிதல்களும், விட்டுக் கொடுத்தலும், கற்பொழுக்கத்திலும் காணப்படாமல் போவதே பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது.

பண்படாத மனங்களில் தோன்றும் ஈர்ப்பை, களவொழுக்கமாகக் கருதி பயணிக்கும் போது பிரிவு நிகழ்கிறது. அப்படியென்றால் அவர்களுக்குள் நிரம்பியிருந்தது காதல் அல்ல. ஒருவருக்கொருவர் இடையிலான ஈர்ப்பும், காதலும் வெவ்வேறு. இவற்றிற்குள் ஏற்படும் குழப்பங்களே பிரிவுக்குக் காரணமாகின்றன. காதலாக நினைத்து மெய்யுறுப் புணர்ச்சியில் ஈடுபட்டு பிரிவதும் வழக்கமாகி விட்டது.

களவொழுக்கம், கற்பொழுக்கமாக மாறிய பின்னர் மணவாழ்வில் எவ்வளவு பிரச்சினைகளை எதிர்க்கொண்டாலும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் பிரிவென்ற சொல்லுக்கே இடமளிக்காமல் உறுதியோடு பற்றியிருப்பதே, 'காதல்'. ஒருவர் மீது மற்றொருவர் ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்தைக் கைவிட்டு, தோற்கப் பழகிக் கொண்டால் வாழ்க்கையிலும், வாழ்க்கையையும் வெற்றிகரமாக்கிக் கொள்ளவியலும்.

தன்னுடைய உயிராய் நினைத்து, அவர்களுக்காகப் பலவற்றை இழந்து, சிலவற்றை அடைந்ததால் பெற்ற இணைப்பை, எப்படி எளிதாக முறித்துக் கொள்வது. ஒன்றை விட சிறந்தது மற்றொன்று, மற்றொன்று என்றெண்ணி வாழ்க்கையை நகர்த்தத் தொடங்கினால், வாழ்க்கையே தோல்வியாகிவிடும்.

இதனால் ஏற்படும் விரக்தியோ எஞ்சியுள்ள வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கிவிடும் என்பதே நிதர்சனம். காதலில் பலவும் கடந்துச் செல்ல வேண்டுமே தவிர, காதலும் கடந்து செல்லலாகாது. இருவருக்கிடையில் இருந்த உறவு, காதல்தான் என்றால் அதற்கு நிச்சயம் தோல்வி கிடையாது. 'கட்டிலில் தொடங்கி கட்டையில் போகும் வரை தொடரும்' அந்த திருமண பந்தம். இரு உள்ளங்களில் நிறைந்துள்ள காதலுக்கு சாட்சி இல்லங்களில் தவழும் மழலைகளே.

**முடிவுரை**

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி" என்று தமிழ்க்குடியின் தொன்மைக்குச் சான்று பகிர்கிறது, புறப்பொருள் வெண்பாமாலை பாடல். இம்மண்ணில் தமிழ்க்குடி தோன்றிய காலந்தொட்டே உள்ளங்களில் பெருக்கெடுத்து ஓடித்திளைத்த அன்பே, காதல். இதைத் தீண்டாமல் தம் வாழ்வைத் தாண்டியோர் மிகச் சொற்பமே. சங்க காலம் என்றால் அது காதலும், வீரமும். பெரும்பாலான இடங்களில் வீரத்திற்கு உரமூட்டியது காதல் என்றால் மிகையல்ல. அவ்வளவு வலிமை மிக்கது காதல். யாரோ முன் பின் தெரியாதவரை திருமணம் செய்து, கற்பொழுக்கத்தில் தொடங்கி, களவொழுக்கத்துடன் வாழ்வதும் தமிழர்களின் மரபே.

**துணைமை ஆதாரங்கள்:**

1. பக்தவச்சல பாரதி .எஸ்., பண்டைத் தமிழ் பண்பாடு மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம், 2019, அடையாளம் பதிப்பகம், சென்னை.
2. ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி பதிப்புக்குழு, தமிழோவியம், 2021, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இன்டஸ்டிரீஸ், அம்பத்தூர், சென்னை.

3. சுப்பிரமணியன், ச.வே., முனைவர், தமிழ் இலக்கிய வரலாறு, 2017, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, 2000, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
5. விமலானந்தம், மது. சா., தமிழ் இலக்கிய வரலாறு, 2004, பாரி நிலையம், சென்னை.


**References:**


1. Bakhthavachala Bharathi, S, Pandai Tamil Panpadu Manidaviyal Nokkil Sanga ilakkiyam, 2019, Adaiyalam Padhippagam, Chennai.
2. Sri Ramakrishna College of Arts and science Editorial Board, Thamizhoviyam, 2021, New Century Book House, Chennai.
3. Subramaniyan, S.V., Tamil Ilakkiya varalaru, 2017, Manivasagar Padhippagam, Chennai.
4. Thamizhannal, Pudhiya Nokkil Tamil Ilakkiya varalaru, 2000, Meenakshi Puthaga Nilayam, Madurai.
5. Vimalanandham, madhu., sa., Tamil ilakkiya varalaru, 2004, Pari Nilaiyam, Chennai.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சத்தியசீலன். த "சங்க கால களவொழுக்கத்தின் வரலாற்றுப் பதிவுகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 2, ஏப்ரல் 2023, பக். 11-16

**Cite this Article in English**

**Sathiyaseelan T " A few records of the History of Sangam period's Love"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 2, April 2023, pp. 11-16